1974 மார்ச் 6]

வந்தவாசி அரசு மருத்துவமனை

* *296 வினா—***திரு. கே. எ. வகாப்** : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசியில் உள்ள அரசினர் மருத்துவமனையை விஸ்த ரிக்கவும், டாக்டர்களுக்கு விடுகள் கட்டித் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வந்தவாசியில் உள்ள அரசினர் மருத்துவமனையில் மகப்பேறு டாக்டர்களுக்கு வீடு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ஒரு நாளைக்கு சுமார் 800 பேர்களுக்கு அதிகமாக சிகிச்சைப் பெற வருகின்றபோது, டாக்டர்கள் மருத்துவமனைகளுக்கு அருகாமையிலே இருந்தால் தான் சரியாகக் கவனிக்க முடியும். வருகின்ற நோயாளிகளில் சிலர் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவர்களாக இருப் பார்கள். வெளியிடங்களிலிருந்து டாக்டர்கள் வரும்வரை பொறுக்க முடியாத நோய் கண்டவர்களாக இருக்கக்கூடும். ஆகவே, உடனடியாக நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வதற்கு, டாக்டர்களுக்கு மருத்துவமனைகளுக்கு அருகிலேயே வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழக அரசு ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையையும் படிப்படியாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறது. அதன்படி வருகின்ற ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையையும் 90 படுக்கைகள் கொண்டதாக விரிவுபடுத்த கருதியுள்ளோம். பொருளாதார வசதிக்கேற்ப ஒவ்வொன்ருக விரிவுபடுத்தப்படும். அதேநேரத்தில் டாக்டர்கள், செவிலியர் கள் ஆகியோருக்கு மருத்துவ மனைகளுக்கு அருகிலேயே வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் பொருளாதார நெருக்கடியின் காரண மாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் மறு பரிசிலனை செய்யப்படும்போது டாக்டர்களுக்கு மருத்துவ மனைகளுக்கு அருகிலேயே வீடுகள் கட்டிக்கொடுப்பதுபற்றி யோசிக்கப்படும்.

திரு. வீ. இராசகோபால் : தலைவரவர்களே, ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையிலும் 'தனி வார்டு' அமைக்க இந்த அரசு முன்வருமா? அதோடு ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ மனையிலும் 'இ.சி.ஜி.' எடுப்பதற்கு வசதிகள் செய்துகொடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தனி வார்டு என்பது எதற்கு என்ற அடிப்படையை ஒட்டிதான் தீர்மானிக்கப்பட வேண்டும். அதுவும் மருத்துவமனைகளின் தன்மையைப் பொறுத்து, கட்டடங்களின் அமைப்பு, வசதியைப் பொறுத்து அமைக்கப்பட வேண்டும். தாலுக்கா மருத்துவமனைகளில் 'இ.சி.ஜி.' (E.C.G.) எடுக்கும் முறையை இரண்டு, மூன்று ஆண்டு காலத்திற்குக் கொண்டுவர முடியாது. ஆனால் மாவட்ட அளவில் அதற்கு ஏற்பாடு செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.

Drinking water supply for Madurai

* 297 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Tamil Nadu Water-supply and Drainage Board has prepared a scheme to increase the water-supply to Madurai City from the river Vaigai; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மதுரை நகருக்கு வைகை ஆற்றிலிருந்து நீர் வழங்குவதைப் பெருக்குவதற்கான ஆய்வுப்பணி முடிவடைந்துள்ளது.

(இ) வரைவுச் செயற்குறிப்புகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது எப்போது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வைகை நீர்த் தேக்கத்தில் இருந்து கொண்டுவர வேண்டிய திட்டம் மிகப் பெரிய செலவை ஏற்படுத்துவதாகும். அவ்வளவு பெரிய செலவில் நடைபெற வேண்டிய திட்டத்தைப்பற்றி நன்கு ஆய்வு செய்ய